REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 25உ புதன் (8—6—55) ★ ★ வெளியூர்: வைகாசி 26உ வியாழன் (9—6—55) [இதழ் 306

கட்டாய ஆரம்பக் கல்வி: அரசியல் சட்ட காலவரைக்குள் நிறைவேருதாம்!

1960-ம் ஆண்டுக்குள் 14 வயதுக்குட்பட்டவர்களுக்கெல்லாம் கல்வி தர வேண்டுமென்று அரசியல் சட்டத்தில் கூறியுள்ளபடி சர்க்கார் செய்ய முடியாதெனக் கருதப்படுகிறதாம்.

அரசியல் சட்டம் நிர்ணயித்த காலத்திற்கு ஆறு ஆண்டுகளுக்குப் பின்புதான் கட்டாயக் கல்வி சாத்தியமெனவும் கருதப்படுகிறதாம்.

1960—61-ல் 6—11 வயது சிறுவர்கள் 75 சதவிகிதத்திற்கும், 11—14 வயது சிறுவர்கள் 30 சத விகிதத்திற்கும் கல்வி பெறக்கூடுமென கல்வி இலாக்கா கருதுகிறதாம்.

வடநாட்டு விவசாயிகளுக்கு சலுகைமேல் சலுகை

விலைச் சரிவைத் தடுக்கக் கோதுமை வாங்கப்பட்டது!

பயிறு வகைகளை வாங்க திட்டம் தீட்டப்படுகிறது!

நெல் பயிரிட்டவர் பரிதவிக்கும் நேரத்தில்தான் இந்தியப் பேரரசு இப்படி நடந்துகொள்ளுகிறது!

புதுடெல்லி, ஜூன் 7—

கொள், கடலை, உளுந்துப் பயிறு போன்ற பயிறு வகைகளின் விலைசரிந்துகொண்டு வருகிறது. மணங்கு ஒன்றுக்கு விலை ரூ.6-க்கும் குறைவாகப் போய்விடாமல் தடுப்பதற்காக, சொந்தத்தில் மேற்படி பயிறு வகைகளைக் கொள்முதல் செய்வது என்று இந்திய அரசாங்கம் முடிவுகட்டி இருக்கிறது.

கோதுமையின் விலை வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த, இந்திய அரசாங்கம் கோதுமை கொள்முதல் செய்திருக்கிறது—செய்தும் வருகிறது என்பது கருதத்தக்கது.

மேற்குறித்துள்ள பயிறு வகைகளில் பெரும் பகுதி, வடநாட்டையே மூல உற்பத்தி இடமாகக் கொண்டிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பம்பாய், பஞ்சாப், உத்திர பிரதேசம், பிகார், மத்திய பிரதேசம், இராஜஸ்தான், பெப்சு, மத்திய பாரத், 'விந்திய பிரதேசம், போபால் ஆகிய பத்து மாநிலங்களில்தான், பயிறு வகைகள் அதிகமாக உற்பத்தியாகின்றன.

எப்படி கொள்முதல் செய்வது என்பதை ஆராய்ந்து திட்டம் தீட்ட மேற்படி மாநிலங்களின் அரசாங்க உணவுத் துறை அதிகாரிகள் இந்தியப் பேரரசின் விவசாய உணவுத் துறை அமைச்சருடன் கலந்து பேச இருக்கின்றனர். இறுதியில் தீர்மானிக்கப்படும் எனத் தெரிய வருகிறது.

முக்கியமாகப் பயிறு வகைகளை அதிகப்படியாக விளைவித்து வரும் வடநாட்டு மாநிலங்களில் நாளுக்கு நாளாக பயிர் வகைகளின் விலை சரியத் தொடங்கியுள்ளது. இத்தகவல் இந்திய அரசாங்கத்திற்குத் தெரிய வந்ததும், பயிறுகளை விளைவிக்கும் விவசாயிகளுக்கு உதவும் நோக்கத்துடன், இதுவரை கோதுமைக்கு மட்டுமே காட்டப்பட்டு வந்த கொள்முதல் சலுகையை, பயிறு இனங்களுக்கும் காட்டுவது என இந்திய அரசாங்கம் முடிவுக்கு வந்திருக்கிறது.

மணங்கு ஒன்று ரூ. 6-க்கும் விலையில் குறைந்துள்ள இடங்களில், பயிறு இனங்களை, மாநில அரசாங்க மூலமாகக் கொள்முதல் செய்ய இந்திய அரசாங்கம் ஆலோசித்துக்கொண்டு இருக்கிறது.

சொந்தக்காரருக்கு டில்லியின் தாராளம்

இந்திய இரயில்வேக்களுக்காக 100 புதிய இரயில் எஞ்சின்கள் சப்ளை செய்யுமாறு டாடா எஞ்சினீயரிங் கம்பெனியிடம், இந்தியப் பேரரசு உத்தரவு தந்திருக்கிறதாம்.

டிராம் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு!

60,000 பம்பாய் வாசிகள் கையெழுத்து மனு தாக்கல்

பம்பாயில் டிராம் கட்டணத்தை உயர்த்த உத்தேசித்திருப்பதை ஆட்சேபித்தும், 'டிரான்ஸ்பர்' டிக்கெட்டுகளை மீண்டும் அமுல் செய்யக்கோரியும் சுமார் 60 ஆயிரம் பேர் கையெழுத்திட்டு நகர சபைத் தலைவரிடம் ஒரு மனு தந்துள்ளனர் என்று தெரிகிறது.

கல்கத்தா பாங்கி ஊழியர்

வேலை நிறுத்தம்

9,000 ஊழியர்கள் 2-மணி நேரம் ஈடுபட்டனர்

கல்கத்தா, ஜூன் 7—

கல்கத்தா பாங்கிகளைச் சேர்ந்த 9,000 பாங்கி ஊழியர்கள், பேனவைத் தொடாமல் 2 மணி நேரம் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர் என்றும், இதனால் ரூ. 12 கோடிக்கு பாங்கி வேலைகள் நிலை நின்றுவிட்டன என்றும் கூறப்படுகிறது.

சட்டக் குழு நியமனம்

சேதல் வாட் தலைவராகிறார்!

புதுடில்லி, ஜூன் 7—

இந்திய அட்டர்னி - ஜெனரல் எம். சி. சேதல் வாட் தலைமையில் 7 உறுப்பினர்கள் கொண்ட 'சட்டக் குழு நியமிக்கப்படும்; நான்கு பேர் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதிகளாகவும் மூவர் பிரபல வழக்கறிஞர்களாகவும் இருப்பார்கள் என்று தெரியவருகிறது.

'நேட்டோ' நிறுவனத்திற்குப் போட்டியாக ஐரோப்பிய கம்யூனிஸ்டு நாடுகள் அண்மையில் வார்சாவில் கூடி ஏற்படுத்திக்கொண்ட 'ஈட்டோ' நிறுவனம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—16/55

புதுவையைப் பொறுத்துக்

கழகச் சொற்பொழிவாளர்கள் கவனிக்க வேண்டியவை

புதுவை வட்டத்தைப் பொறுத்தவரையில், எந்தப் பொது நிகழ்ச்சியாக இருந்தாலும், புதுவை நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ச. சிவப்பிரகாசம் அவர்களது இசைவு இல்லாமல் கழகத் தோழர்களோ அல்லது கழகச் சொற்பொழிவாளர்களோ கலந்துகொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"புதுவையிலுள்ள 'திராவிடர் முன்னணி', 'மக்கள் முன்னணி' முதலிய அமைப்புகள், புதுவை தி. மு. கழகத்தின் உடன்பாடில்லாத புறம்பான அமைப்புகளாகும்," என்று புதுவை தி. மு. கழகம் அறிவிப்பதால், புதுவை தி. மு. கழகத்தின் இசைவு இல்லாமல் பொதுவாகக் கழகத் தோழர்களும், குறிப்பாகக் கழகச் சொற்பொழிவாளர்களும் அவற்றின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அறிவகம்" சென்னை } 8—6—55 }

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பாகிஸ்தான் காஷ்மீர் பகுதியில் குழப்பம்?

காங்கிரஸ் இதழ்கள் கூறுகின்றன

ஜம்மு, ஜூன் 8—

மாநில எல்லைகள் அழிக்கப்பட்டு ஒரே அங்கமாகும் மேற்கு பாகிஸ்தானுடன், 'ஆசாத் காஷ்மீ'ரை இணைக்க வேண்டும் என்ற பாகிஸ்தானின் கருத்தை ஆட்சேபித்து பாகிஸ்தான் ஆட்சிக்குட்பட்ட காஷ்மீர் பகுதியில் ஒன்றான ராவல்கோட்டில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும், அவர்களைக் கலைக்க பாகிஸ்தான் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பல மாணவர்கள் கொல்லப்பட்டதாகவும், ஜம்மு—காஷ்மீர் அதிகாரி ஒருவர் கூறிய தகவலிலிருந்து அறியவருகிறது.

பாகிஸ்தான் இராணுவத்தின் இந்தப் போக்கிற்கு அஞ்சி, மக்கள், சில் அருகில் உள்ள பாரல்கோட்டையில் தஞ்சம் புகுந்ததாகவும், பாக். விமானங்கள் இக்கோட்டை மீது குண்டு வீசியதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

மாணவரை ஆர்ப்பாட்டத்திலீடுபடத் தூண்டிய தலைவர்கள் தலைமறைவாகியிருப்பதாகவும், அவர்களுடைய வீடுகள் அழிக்கப்பட்டன என்றும், ஆர்ப்பாட்டத்தை ஒட்டி, 1,000 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்தத் தகவலை காங்கிரஸ் இதழ்கள் தந்திருக்கின்றன.

யாருக்கு யார் அடங்கி நடக்க வேண்டும்?

ஆதிக்கம்செலுத்தத்தக்கவர் யார்?

முதலமைச்சரா? மாநில காங்கிரஸ் தலைவரா?

ஆராயப் புறப்பட்டுள்ளார் ஆந்திர காங்கிரசின் புதிய தலைவர்

"அமைச்சர் குழுவை கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவதோ அல்லது ஒத்துழைப்பதோ நன்மை தராது."

"ஆட்சிப் போக்கில் ஏதாவது தவறு நேர்ந்தால் சுட்டிக் காட்டி, அதைத் திருத்தி, ஆட்சியினருக்கு ஆதரவு தருவதை நாங்கள் செய்வோம்."

—இவ்வாறு, ஆந்திர காங்கிரசிற்குப் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்ற அல்லூரி சத்தியநாராயண ராஜு, இங்கு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் குழுக்களையும், ஊழியர்களையும் காங்கிரஸ் மந்திரி சபையுடன் ஒத்துழைக்கும்படியும் அதே நேரத்தில் அமைச்சர் குழுவின் தவறுகளைச் சுட்டிக் காட்டும்படியும், ராஜு மேலும் கேட்டுக் கொண்டார்.

அந்தக் கூட்டத்திற்கு என். சஞ்சீவி'ரெட்டி தலைமை வகித்தார்.

ஆனால் திரு. ராஜுவுக்கு எதிராக என். ஜி. ரங்காவை ஆதரித்த முதலமைச்சர் பி. கோபால் ரெட்டி, சந்திரமவுலி, லட்சண்ணா முதலியவர்கள் கலந்து கொள்ளவில்லை.

"ஒரு அமைப்பு, தனி ஒருவரைக் காட்டிலும் பெரியதாகும்; மக்களாட்சி முறையில் தேர்தலும், பலதிறப்பட்ட கருத்துக்களும் இருப்பது தவிர்க்க முடியாததாகும். தேர்தல் முடிந்துவிட்டதும், கடந்த காலத்து மனக் கசப்புகளை மறந்து, ஒற்றுமையுடன் உழைக்க முன்வர வேண்டும்; இத்தகு உணர்வைத்தான் பிரிட்டன் போன்ற ஜனநாயக நாடுகளில் காண முடிகிறது; அதை நாம் ஒரு முன்மாதிரியாகக் கொண்டு நடந்து கொள்ள வேண்டும்," என்றும் ராஜு உபதேசம் புரிந்தார்.

ஒரே நாளில் 30 பெண்கள் உட்பட 439 பேர் கைது

அகாலி தளத்தினரின் உரிமைக் கிளர்ச்சி வளருகிறது

அமிர்தசரஸ், ஜூன் 7—

பஞ்சாப் மொழிவழி மாநில அமைப்புக்காக அகாலிதளத்தவர் நடத்தும் உரிமைக் கிளர்ச்சியை ஒட்டி மாநிலமெங்கணுமாக நேற்று ஒரு நாளில் மட்டும் 30 பெண்கள் உட்பட 439 பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது. இதுவரை மொத்தம் கைதானோர் 2,741 பேர்கள் என்று தெரியவருகிறது.

நம் நாடு
தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 8—6—'55

எதிர்பார்த்தது!

அரசியல் சந்தர்ப்பவாதத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வருவதில், காங்கிரசிற்குக் காங்கிரஸ் கட்சியே தான் இணையாகும். தனது பிடியிலிருந்து அதிகாரம் நழுவிச் சென்றுவிடாமல் இருப்பதற்கு, எந்தவிதமான முரண்படும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவதில் காங்கிரஸ் எப்பொழுதும் தயக்கம் காட்டியது கிடையாது. அதிகாரத்தைப் பெற விரும்புவோரும், கிடைத்ததை உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொள்ளவிழைவோரும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென மாக்கிவெல்லி சுட்டிக்காட்டியுள்ளாரோ, அவைகளில் ஒன்றுவிடாமல் செயலாற்றிவரும் நடமாடும் மாக்கி வெல்லிகளாகக் காங்கிரஸ் தலைவர்கள் உள்ளனர் என்பது துளியும் மிகையாகாது.

இதுவரை ஒப்புக்கொள்ளப்பட்டு வந்துள்ள அரசியல் அறநெறிக் கோட்பாடுகள் அனைத்தையும், வெறும் பதர் என ஒதுக்கித் தள்ளி விடுவதில் காங்கிரஸ் தலைவர்கள் புகழ்பெற்று விளங்குபவர்களாவர். அரசியல் துறையில், அதற்குரிய ஒழுக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டுமென கனவிலும் கருதாத கனவான்கள் காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் ஏராளமாக உள்ளனர்.

இத்தகு ஒழுங்கீனத்திற்கு பண்டிதர் விதிவிலக்கல்ல. அதற்கு மாருக, அவர்தான் இந்தப் பழுதுடைய போக்கிற்கு ஞானாசிரியராக விளங்குகிருர். குருவின் இலட்சணமே படுமோசம் என்ருல், அவரைப் பின்பற்றும் அல்லது பின்பற்றுவதாக விளம்பரப் படுத்திக் கொள்ளும் சீடகோடிகளின் நடத்தையைக் குறித்துக் கூறவா வேண்டும்?

பொதுத் தேர்தலில் பெரும்பான்மையான மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டவர்களை, மாநில கவர்னர்களாக்கிக் காங்கிரஸ் கவுரவித்து இருக்கிறது. மக்கள் தீர்ப்பை மதித்து நடக்கும் மரக்கட்டைகள் தாங்கள் அல்ல என, தீர்ப்பளித்த மக்களுக்கு அறைகூவல் விடுத்திருக்கின்றனர் காங்கிரஸ் உயர் இடத்தார்.

தேர்தல் காலத்தில் காங்கிரஸ் கட்சியை வெளிப்படையாக எதிர்த்து, அந்த ஒரு காரணத்திற்காகவே பெரும்பாலான வாக்காளர்களின் பேராதரவைப் பெற்று, காங்கிரஸ் அபேட்சகர்களை முறியடித்து வெற்றி பெற்றவர்களை, தேர்தலில் கொடுத்த வாக்குறுதியை மீறி மக்களுக்கு துரோகம்செய்யும்படி, அதிகாரத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்ற ஒரு பேராசையின் காரணமாக மட்டுமே, காங்கிரஸ் தூண்டி இருக்கிறது. அந்த அதிகாரத்திற்காக, அதை முன் கூறப்பட்ட வாக்குத் தவறுபவர்களுடன் காங்கிரஸ் பகிர்ந்து கொண்டும் இருக்கிறது.

அரசியல் வாழ்விலிருந்து ஜாதியை அறவே விரட்டிவிடப் போவதாகக் காங்கிரஸ் பறைசாற்றி வருகிறது. அதே நேரத்தில், ஜாதி ஒன்றை மட்டுமே தகுதியாகக் காட்டி அரசியலில் நாவசைத்து வருபவர்களை, கட்சியின் போலிப் பெருமை கருதி, காங்கிரஸ் கூட்டுச் சேர்த்தும் வருகிறது.

இவ்வளவு முரண்பட்டப் போக்குகளையும், காங்கிரஸ் கட்சியிடம் நாம் தினம் தினம் கண்டு வருகிருேம்.

தி. கொ. தமிழ்ப் பகுதிகளை சென்னை தமிழ்ப் பகுதிகளுடன் இணைத்துவிட வேண்டுமென தி.கொ.த.நா. காங்கிரஸ் கோரியது; அதை ஒப்புக்கொள்ள தி. கொ. காங்கிரஸ் மறுத்துவிட்டது.

தனது தனித்தன்மையையும், தனிமையாக இயங்கத் தனக்குள்ள உரிமையையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென தி. கொ. த. நா. காங்கிரஸ் விரும்பியது. அவ்விருப்பத்தை ஒரு நாளும் ஒப்புக்கொள்ள முடியாது என அ. இ. காங்கிரஸ் கூறிவிட்டது.

இதன் விளைவாக ஆட்சிப் பொறுப்பில் இருந்து வந்த தி. கொ. காங்கிரஸ் மந்திரி சபை சரிந்தது. புதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அத்தேர்தலில் தி. கொ. காங்கிரசை தி. கொ. தமிழ்ப் பகுதிகளில் தி. கொ. தமிழ்நாடு காங்கிரஸ் முறியடித்தது.

தி. கொ. த. நா. காங்கிரஸ் கட்சியினரின் கூட்டுறவு இல்லாமல் ஆட்சிப் பொறுப்பில் அமரமுடியாது என்ற நிலைமை தி. கொ. காங்கிரசிற்கு ஏற்பட்டது. தி.கொ.த.நா. காங்கிரசால் தனக்குத் தேர்தலில் கொடுக்கப்பட்ட அடியை மறந்து நடந்துகொள்ளும் பெருங்குணம் தி. கொ. காங்கிரசிற்கு இல்லாமல் போய் விட்டது.

மக்கள் முடிவிற்கு மதிப்பளித்து நடப்பதுதான் மக்களாட்சி முறை என்ற அரசியல் அறநெறிக்குக் கட்டுப்பட்டு நடப்பதைக் காங்கிரஸ் தனது கடமையாகக் கொண்டிருக்குமானுல், தி.கொ.த.நா.காங்கிரஸ் தேர்தலில் தனக்கிழைத்த தீமையை தி. கொ. காங்கிரஸ் ஒருபொருட்டாகக் கருதி இருக்காது. மக்கள் தந்த தீர்ப்பின் வழிசென்று தி. கொ. த. நா. காங்கிரசை மீண்டும் கட்டாயமாகச் சேர்த்துக் கொண்டு, தி. கொ. ஆட்சிப் பொறுப்பில் காங்கிரஸ் அமர்ந்திருக்கும்.

மக்கள் முடிவைப் பொருட்டாக மதித்து நடந்துகொள்ள வேண்டும் என்ற பெருங் குணம்தான் காங்கிரசிடம் இல்லையே ஒழிய, அதிகாரத்தை எப்படியும் பெற்ருகவேண்டும் என்ற அதிகார மோகம் அதற்கு இல்லாமல் இல்லை. அதற்காக, சிறுபான்மையர்களை கொண்ட மக்கள் சோஷலிஸ்ட் கட்சியினரை பெயரளவிற்குப் பதவியிலமர்த்திவிட்டு, அவர்களைத் தாம் விரும்பிய வண்ணம் ஆட்டிப்படைத்து வந்தது திரு-கொச்சி காங்கிரஸ்!

அமைச்சர் பதவி மக்கள் சோஷலிஸ்டு கட்சியிடம்! ஆனல் அதற்குரிய அதிகாரம் அனைத்தும் திரு-கொ.காங்கிரஸ் கட்சியிடம் குவிக்கப்பட்டுக் கிடந்தது!

இது ஒரு அரசியல் விசித்திரம்! ஜன நாயகப் பரீட்சையில் ஒரு அத்தியாயம்! அதுவும் காங்கிரஸ் பதிப்பு!

தி. கொ. தமிழ் மக்களின் கோரிக்கையை வலியுறுத்த தி. கொ. த. நா. காங்கிரஸ், அங்குள்ள தமிழ் மக்கள் பெயரால் 'விடுதலை நாள்' கொண்டாட முனைந்தது. தடை உத்தரவை ம. சோ. கட்சி ஏவியது! மீறுவதென தி.கொ.த.நா. காங்கிரஸ் தீர்மானித்தது!

ம. சோ. கட்சியை ஆட்டிப் படைத்து வருவது தி. கொ. காங்கிரஸ் கட்சிதான் என்பதை நாம் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும், இந்தக் கட்டத்தில்!

போலீஸ் அடக்குமுறை சீறியது! தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்!

தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட அக்கிரமத்தை தி. கொ. காங்கிரஸ் கண்டிக்கவில்லை; கண்டிக்க விரும்புவதாகக் காட்டிக் கொள்ளவும் இல்லை.

தமிழர்களை ம. சோ. கட்சி மந்திரி சபை சுட்டுக் கொன்றது நியாயமெனக் கூறுவது போல, தொடர்ந்து ம. சோ. கட்சி பதவியிலிருப்பதை தி. கொ. காங்கிரஸ் ஆதரித்தும் வந்தது!

நேரடியாகப் பதவியிலமர வேண்டும் என்ற ஆசை தி. கொ. காங்கிரசிற்கு என்றும் உண்டு. இந்தத் தருணத்தை ஒரு வாய்ப்பாகக் கொண்டு, பதவியைக் கைப்பற்றிவிட வேண்டுமென தி. கொ. காங்கிரஸ் முடிவுக்கு வந்துவிட்டது.

போலீஸ் அடக்குமுறையின் காரணமாகவும், போடப்பட்டுள்ள வழக்குகளின் காரணமாகவும், தி.கொ.த.நா.காங்கிரசின் உற்சாகம் குன்றத் தொடங்கிவிட்டது. அதன் பிற்காலப் போக்கு, மேற்தறித்த முடிவைத்தான் கொள்ளச் செய்வதாக இருக்கிறது.

ஒரு காலத்தில் தன்னை மதிக்காமலும், தனது கோரிக்கைக்கு செவி மடுக்காமலும், தன்னை வலிய வம்புக்கிழுத்துத் தொல்லை பல விளைவித்ததுமான தி. கொ. காங்கிரசுடன் மீண்டும் கூட்டுச் சேர, தி. கொ. த. நா. காங்கிரஸ் முன்வந்தது; கூட்டும் சேர்ந்தது. ம. சோ. கட்சி மந்திரிசபை விரட்டப்பட்டு, அந்த இடத்தில் காங்கிரஸ் மந்திரிசபை குடியேறியது!

இப்பொழுது பதவியும், அதற்குரிய அதிகாரமும் ஒரே இடத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது!

'விடுதலை விழா' கொண்டாடிய தமிழர்களைச் சுட்டுக் கொன்ற ம. சோ. கட்சிக்கு, எந்தக் கட்சி திரை மறைவிலிருந்து கொண்டு தூண்டுதலும் ஆதரவும் கொடுத்துவந்ததோ, அதே தி. கொ. காங்கிரஸ் கட்சி, இப்பொழுது தமிழர்களைச் சுட்டுக் கொன்ற வீரச் செயல்களைப் புரிந்த போலீஸ் அதிகாரிகளுக்கு பரிசளிக்க முனைந்திருக்கிறது!

இதைக் கண்டு தி. கொ. த. நா.காங்கிரஸ் கோபிக்கிறது! தி. கொ. போலீஸ் தலைமை அதிகாரியைக் கண்டிக்கிறது!

அவரை மாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்ள இந்தியப் பேரரசிற்குக் காவடி எடுக்கப் போவதாகவும் கங்கணங் கட்டிக்கொண்டு இருக்கிறது!

தமிழர்கள் விஷயத்தில் சில போலீஸ் அதிகாரிகள் வரை கடந்து நடந்து கொண்டனர் என்றக் குற்றச்சாட்டை விசாரித்தறிய இருப்பதாக காங்கிரஸ் மந்திரி சபை சட்டசபையில் கூறியதற்கு, இப்பரிசளிப்பு முரணாக இருக்கிறதே என தி. கொ. த. நா. காங்கிரஸ் இடித்துக் கொள்ளுகிறது! அரசாங்கப் போக்கிறகு ஆச்சரியமும் படுகிறதாம் தி. கொ. த. நா. காங்கிரஸ்!

தி. கொ. காங்கிரசின் முரண்படும் நடத்தைகண்டு தி. கொ. த. நா. காங்கிரஸ் செயற் குழு ஆச்சரியப்படுகிறது! ஆனல் தமிழ் மக்களோ, தி. கொ. த. நா. காங்கிரஸ் தலைவர்களின் அரசியல் ஒழுங்கீனம் கண்டு ஆச்சரியமட்டுமல்ல, அதிர்ச்சியும் அடைந்துள்ளனர்!

காங்கிரஸ் கட்சியிடம் எதிர்பார்க்கக் கூடியது இதுதான். நாம் எதிர்பார்த்தது நடைபெற்றிருக்கிறது.

யானையின் தந்தத்தை சிங்கத்தின் குகையில் எதிர்பார்ப்பது இயல்பு. நரியின் பொந்தில், சிறு எலும்புத் துண்டுகளைத் தவிர்த்து வேறு எதனை எதிர்பார்ப்பது!

'ஏற்பட்டுள்ள எதிர்ப்பிற்கு இந்தி ஆதரவாளர்களின் போக்கே காரணம்'

'கெடுபிடி செய்யாமல் தந்திரமாகப் புகுத்த வேண்டும்'

பம்பாய் கவர்னரின் பஞ்சதந்திரப் பேச்சு!

பம்பாய், ஜூன் 6—

"இந்தி மொழிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுமானுல், அம்மொழியைப் போது மொழியாக்க முயற்சிப்பவர்கள்தான் அதற்காக நிந்திக்கப்பட வேண்டியவர்களாவர்; இந்தி பேசப்படாத பகுதிகளில் எரிச்சலையோ அல்லது, சந்தேகத்தையோ உண்டாக்கக் கூடிய தவறுகள், இந்தி ஆதரவாளர்கள் செயலில் இல்லாமலிருக்க வேண்டும். அவர்கள் எண்ணிக்கை எதுவாக இருந்தபோதிலும், இந்தி பேசாத மக்களின் ஒப்புதல் பெற்றுத்தான், இந்தியாவின் மொழியாக இந்தி இருக்கவேண்டும். பெரும்பான்மையினரின் ஆட்சி என்ற விதியை மேற்கொள்ளுவதற்கு, மொழி ஒரு அரசியல் பிரச்சினையாக இருக்கவில்லை- அதற்குரிய அரசியல் தன்மை இருந்தபோதிலும், ஏறத்தாழ அது சமுதாய கலாச்சார பிரச்சினையாகும்.

"அச்சுறுத்தி இணங்க வைக்கும் தார்மீக பலாத்காரம் உள்பட, எந்தவித பலாத்காரத்தாலும், எப்பொழுதும் ஒரு மொழியை அதை எதிர்ப்பவர்கள் மீது திணிக்க முடியாது. எதிர்ப்பு இருக்குமானுல், அதைப் பொறுமையாகக் கேட்க வேண்டும்; சீர்தூக்கிப் பார்க்கப்பட்டு அனுதாபத்துடன் சிக்கறுக்கப்பட வேண்டும். இந்த மனப்போக்கு கலாச்சார, சமுதாயத்துறைகளுக்கு முக்கியமாக இருந்தாக வேண்டும். இதுபோன்ற விஷயங்களில் இன்றியமையாதத் தேவையாக உள்ள பொறுமை, விடாமுயற்சி ஆகிய இரு தகுதிகளும் ஊழியர்கள் அனைவரிடமும் இருந்தாக வேண்டும்,"

—பம்பாய் கவர்னரான அரிகிருஷ்ண மெகதாப், பம்பாய் இந்தி வித்யாபீடத்தின் பட்டமளிப்பு விழாவில் பேசும்பொழுது மேற்குறித்தவாறு கூறியுள்ளார்.

மொழி வகையில் அமெரிக்காவும், சோவியத் ரஷ்யாவும் அனுபவித்த சங்கடங்களைக் குறிப்பிட்டுவிட்டு, இப்பொழுதும்கூட சிறு நாடுகளாக உள்ள யூகோவிலும் பெல்ஜியத்திலும் நிலவிவரும் மொழி சிக்கல் குறித்தும் மெகதாப் விளக்கிக் கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது :—

"இந்தி மொழி குறித்து அரசியல் சட்டத்திலுள்ள சில விதிகளை நிறைவேற்றுவதற்காக இந்திய அரசாங்கம் மேற்கொண்ட சில நடவடிக்கைகளுக்கு எதிராக எதிர்ப்புக் குரல் ஒன்று தெற்கிலிருந்து அண்மையில் கிளம்பியது.

"எனக்குத் தெற்கைக் குறித்துக் கொஞ்சம் தெரியும். மொழியைப் பற்றிமட்டுமே என்பதில்லாமல் பல்வேறு விஷயங்களிலும் தென்னகத்தினர்களின் சங்கடமும் உள்ளக்கிடக்கையும் குறித்து அறிய நான் முயற்சித்திருக்கிறேன். இப்பொழுதும்கூட ஐயத்திற்கிடமின்றி குறிப்பிடத் தகுந்த அளவு மாறுபாடு இருக்கத்தான் இருந்து வருகிறது.

"தென்னகத்தைச் சேர்ந்த பல கற்றறிஞர்களால் இப்பொழுது எதிர்க்கப்பட்டுவருகிற 'ஆரிய கலாச்சாரம்' என்று அழைக்கப்பட்டு வருவதும்கூட, தென்னுட்டு ரிஷிகளையே தனது பிறப்பிடமாகக் கொண்டு விளங்குவதேயாகும்.

"எனவே, ஆட்சி மொழியாக இந்தியை உடனடியாக ஆக்கிவிட வேண்டுமென்பதற்காக எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கைகளை எதிர்ப்பவர்களின் உள்ளெண்ணத்தில் ஒருவருக்கும் சந்தேகம் இருக்கக்கூடாது."

சிறுமியை மணந்த முதியவர்

பேத்திக்கு வயது 24! புதிய தாரத்திற்கு வயது 18!

காசி க்ஷேத்திரத்திலிருந்து ஒரு விந்தையான—ஆனுல் வேதனையும் வெட்கமும் தரும் செய்தி ஒன்று வந்திருக்கிறது.

அஸ்மார்க் மாவட்டத்தில் பாரா என்ற சிற்றூரில் ஒரு முதியவர் இருக்கிருர். அவருக்கு வயது 85 ஆகிறது.

அவர் 18 வயது பெண் ஒருத்தியைக் கல்யாணம் கட்டிக்கொண்டார்!

ஏற்கனவே, அவருக்கு ஆறு முறை கல்யாணம் நடைபெற்று இருக்கிறது!

அவருக்கு, 24 வயதுடைய ஒரு பேத்தியும் இருக்கிருள்!

'வரலாறு தரும் பரவசத்தில் உண்மையை மறக்கக் கூடாது'

'ஆட்சி முறை தத்துவங்களை உருவாக்கியோரின் அடிப்படை எண்ணத்தை உணர வேண்டும்'

சென்னைக் கூட்டத்தில் சம்பத் விளக்கவுரை

'மக்களும் ஆட்சியும்' என்ற தலைப்பில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், கடந்த 5-6-55 அன்று சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில், மாநில மாநாட்டு நிதிக்காக நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதியை நேற்றைய இதழில் வெளியிட்டிருந்தோம்.

சமுதாய உருவகம், மன்னர்கள் தோற்றம், அவர்களின் அழிவு, ஆட்சியைப் பற்றி மக்களின் சிந்தனை வளர்ச்சி, புதிய ஆட்சி முறைகளுக்கான எண்ணங்கள் பற்றிய அவரது கருத்துக்கள் இந்தப் பகுதியில் இடம் பெற்றிருக்கின்றன :—

தொடர்ந்து தோழர் சம்பத் அவர்கள் பேசியதாவது :—

"'மக்களும் ஆட்சியும்' என்ற தலைப்பில் நான் பேச வேண்டும் என்று பணித்திருக்கிறார்கள்.

"மக்கள் என்றால் நமது மக்களைப் பற்றியும், ஆட்சி என்றால் நமது மக்களுக்காக உள்ள ஆட்சியைப் பற்றியும்தான் நாம் குறிப்பிட முடியும்.

"நமது மக்களைப் பற்றிய கவலையும், இப்போதிருக்கிற அதிருப்திகரமான ஆட்சியை மாற்றியமைக்கிற முயற்சியும் கொண்டவர்களாக இருக்கிறோம்.

"மக்கள்—எளிதில் பொருள் காண முடியாத ஒரு சொல்—என்று நமது அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"மனிதன் என்ற சொல்லுக்கும், மக்கள் என்ற சொல்லுக்கும் ஆழ்ந்த பொருள் வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது.

"மனிதன் என்று குறிப்பிட்டால், ஆடு—மாடு—குதிரை என்பதுபோல் மனிதனும் ஒரு பிராணியாகக் கருதப்படக்கூடும்; ஆனால், மக்கள் என்றால், அறிவு—ஆற்றல் உணர்ச்சி கொண்டவர்கள் என்று பொருள் விரிந்து நிற்கும் சொல்லாகிறது.

"மக்களும்—ஆட்சியும் பற்றிப் பேசுகிற நாம், இந்தப் பொருள் வேறுபாடுகள் பற்றி ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்கவோ, அல்லது தத்துவார்த்தரீதியில் விவாதிக்கவோ நாம் இங்கு முற்படவில்லை.

"உலகத்தில் தனித்தனியே இருந்த மனிதர்கள் படிப்படியாக சமுதாயமாக ஒன்றுபட்டார்கள்; தனித்தனியாக இருந்த மனிதர்கள், தாங்கள் தனித்து இருப்பதால், தங்களுக்கு ஏற்படுகின்ற ஆபத்துக்களைச் சமாளிக்க முடியாதவர்களாயினர். தனியாக இருக்கும்போது, உயிருக்கு ஆபத்து வருகிறது. பட்டினியால்—பசியால்—கொடிய மிருகங்களால்—வெள்ளம் போன்ற இயற்கையின் கொந்தளிப்பால் ஆபத்து நேரிடுகிறது.

"இந்த ஆபத்துக்களிலிருந்து தப்பித்துக் கொள்ள—தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள மனிதர்கள், சமூகமாக ஒன்றுபட்டு வாழ நினைத்தார்கள்.

"சமூகமாக ஒன்றுபட்ட பின்னர், அந்தச் சமூகத்தின் உறுப்பினர்களைக் கட்டுப்படுத்த சில திட்டங்கள், ஒழுங்கு முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்களும், முறைகளும் உருப்பெற, எத்தனையோ மனிதர்களின் உள்ளம் அமைதி குலைந்து, அலைக்கழிக்கப்பட்டிருக்கும்.

"சமுதாயத்திற்கு என உருவாக்கப்பட்ட நடைமுறைகளில் ஒன்றாகத்தான், மக்கள் தங்களை ஆள்வதற்கென மன்னர்களைப் படைத்தார்கள்.

"நாம் மறந்துவிடக்கூடாது—மக்கள்தான் முதலில் தோன்றினார்கள் என்பதையும், அவர்களின் படைப்புத்தான் மன்னர்கள், அரசாங்க முறைகள், தலைவர்கள் முதலியனவெல்லாம் என்பதையும்!

"சமுதாயமாக ஒன்றுபட்ட மக்களை, விரோதிகளிடமிருந்தும், வேறு பல ஆபத்துக்களிலிருந்தும் காப்பாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்டவர்களே மன்னர்கள்!

"'சமுதாயத்திற்கென சில கடமைகளை நிறைவேற்றுகிறேன்; உங்களைக் காப்பாற்றுகிறேன்,' என்று கூறுகின்ற நிலையில் மன்னர்கள் இருந்ததால்தான், தமிழ் மொழியில் மட்டும்—வேறெந்தமொழியிலும் அத்தனை பொருள் பதிந்ததாக இல்லாததாக விளங்குகிற 'காவலன்' என்ற சொல்லால், அவர்கள் அழைக்கப்பட்டனர்.

"மக்கள் தாங்களாகப் பார்த்துப் படைத்த காவலர்களுக்கு — மன்னர்களுக்கு சில அதிகாரங்களையும், தங்களில் எவருக்குமில்லாத உரிமைகளையும் வழங்கினார்கள். மக்கள் வழங்கிய உரிமைகளையும், அதிகாரங்களையும் மக்களின் பாதுகாப்பிற்காகவே மன்னன் செலவிட வேண்டும் — உபயோகிக்க வேண்டும்; சுருங்கக் கூறின், மக்களுக்கு நல்ல ஒரு வேலைக்காரனாகவே மன்னன் இருக்க வேண்டும்.

"மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்துவதற்கென பெற்ற அதிகாரங்களையும், உரிமைகளையும் கொண்டு, நெடுக நெடுக, மக்களுக்குப் புறம்பான வகையில் தனி சக்தியை உருவாக்கிக் கொள்ள மன்னர்களால் முடிந்தது.

"முதலில், மன்னர்கள், மக்களுக்கு நல்ல வேலைக்காரர்களாகவே இருந்திருக்கிறார்கள்; ஆனால் அவர்கள், மக்களுக்குப் புறம்பாக வளர்த்துக் கொண்ட சக்தியின் துணையினால், காலப்போக்கில் மக்களை மறந்தவர்களாக—மக்களை மதியாதவர்களாக—மக்களின் காவலன் என்பதை நினைவிலிருந்து இழந்தவர்களாக — மக்களைக் கொடுமைப்படுத்துபவர்களாக— தாங்கள் ஆடம்பர வாழ்க்கையில் ஊறித்திளைக்கவும், மக்கள் அவதியுறவுமான கொடுஞ்செயல் புரியும் கொடுங்கோலர்களாகவும் மாறினர்.

"இந்தக் கட்டத்தில்தான் மக்கள்—'தொல்லைகளைப் போக்கவும், நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் நாம் நியமித்த மன்னர்கள் இன்று நம்மையே கொடுமைக்காளாக்குகிறார்களே! வேலைத் தொல்லைகளை விட மன்னனின் தொல்லைகளே அதிகரித்துவிட்டனவே'—என்று கவலைப்படத் துவங்கினர்.

"இப்படிக் கவலை ஏற்பட்ட போதுதான், மக்கள் தீவிரமாகச் சிந்திக்கத் துவங்கினர்; குறைபாடுகளின் அனுபவங்களை சீர்தூக்கிப் பார்த்து, அவசியத்தை முன்னிட்டு, மன்னர் முறையை மாற்றுவது பற்றிக் கவலைப்பட்டனர்.

"அவர்களின் தீவிர சிந்தனை, பிரான்சு, இங்கிலாந்து போன்ற நாடுகளில், 'மன்னரை அறவே தொலைத்துவிடுவது,' என்ற நிலையைக்கூட உருவாக்கியிருக்கிறது.

"'மன்னன் வேண்டாம்; பிரச்சினைகளுக்குப் பரிகாரங்களை மக்களே கூடி முடிவு செய்வது, என்ற ஒரு நிலை பின்னர் பிறந்தது.

"எதிரிகளைச் சமாளிக்க சண்டையிடுவதா, சமாதானம் செய்துகொள்ளுவதா, சரணாகதி அடைவதா என்பதை மக்கள் கூடி முடிவு செய்வது என்ற நிலைபிறந்த போது—கூடியிருந்த மக்கள், முடிவு செய்யவேண்டிய பிரச்சினையை மறந்துவிட்டு தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ள முற்பட்டனர்—ஒரு கூட்டம் சண்டையிட வேண்டும் என்பதும், வேறொரு கூட்டம் சமாதானம் வேண்டும் என்பதும், மற்றொரு கூட்டம் சரணாகதி அடையவேண்டும் என்பதும் — இப்படி தங்களுக்குள் முட்டி மோதிக்கொள்வதுபோன்ற சம்பவங்கள் சாதாரணமாகவே நடைபெற்றிருக்கிறது.

"இதே கட்டத்தில்தான்— 'மன்னன் வேண்டாம்; நாமே கூடி முடிவு செய்வோம் என்றால் அது ஆபத்தான விளைவுகளைக் கொண்டதாயிருக்கிறதே,' என்ற சிந்தனை எழுந்தபோதுதான்—இப்போது உலகெங்கணும் போற்றப்படுகிற ஜனநாயக முறை உருப்பெற்றது எனலாம்.

"மீண்டும் மக்கள் அரசாங்கத்தைப் பற்றிக் கவலைப்பட்டார்கள்—சிந்தித்தார்கள்; இதன் விளைவாக, ஆட்சி பீடத்தின் ஒவ்வொரு அசைவிற்கும் மக்களின் சம்மதமும், அனுமதியும் வேண்டும் எனக்கோரும் ஜனநாயக எண்ணம் மலர்ந்தது.

"ஒவ்வொரு பிரச்சினைக்காகக் கூடுவதும், அடித்துக்கொள்வதும், மோதிக் கொள்வதும் என்ற நிலைக்கு மாறாக—'நாட்டின் அத்தனை பிரச்சினைகளுக்குமாக ஒரு சபையில் கூடுவோம்; அந்தச் சபையில் நமது பிரதிநிதிகளை நியமிப்போம்; அந்தப் பிரதிநிதிகள் புத்திசாலிகளாகவும், அதோடு நல்லவர்களாகவும் இருக்கவேண்டும்; அந்தப் பிரதிநிதிகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நம்முடைய பிரச்சினைகளைச் சமாளிப்பார்கள்; அதிலும் ஒரு பாதுகாப்பான முடிவுக்காக அந்தப் பிரதிநிதிகளில் பெருவாரியானவர்களின் குரலுக்கு மதிப்புத் தருவோம்,'—என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது எனலாம்.

"இந்த நிலையை நாட்டில் அமுல் செய்ய மக்கள் போராடினார்கள்—வாதாடினார்கள்.

"மக்களுக்காகவே மக்களால் படைக்கப்பட்ட மன்னர்கள் சிலர், தாங்கள் பதவியிலிருப்பதற்கு தேவனின் ஆணை பெற்றிருப்பதாகவும், தாங்கள் ஆட்சி பீடத்தைவிட்டு அகல முடியாதெனவும் புதிய பாத்தியதை கொண்டாடினர்.

18-ம் நூற்றாண்டில், பிரான்சில் நடைபெற்ற கோரக் கொலைச் சம்பவங்கள்—இந்த மன்னர்களின் புதிய பாத்தியதை, கொடுங்கோல் ஆட்சி முதலியனவற்றின் விளைவுகள்தான்!

"மக்களுக்காக நாம்—என்பதை மறந்த மன்னர்களுக்கு, ரூசோ போன்றவர்கள் 'சமுதாய ஒப்பந்தங்க'ளால் அதனை நினைவுபடுத்தினார்கள். வால்டேர் போன்றவர்கள் நாடகங்களின் மூலம் மக்களின் கருத்தைச் சுட்டிக்காட்டினார்கள்.

"இன்று உலகத்திலுள்ள மன்னர்கள், அந்த சொல்லுக்குரிய முழுப் பொருளுடன்—முழு அதிகாரங்களுடன் இருக்கவில்லை.

"நீலகிரி மலையில் 'தோதவர்'கள் என்ற ஒரு தொன்மை வாய்ந்த வகுப்பு மக்கள் வாழ்கிறார்கள்; அவர்கள் இப்போது சுமார் 50 பேர்கள் மட்டுமே இருக்கின்றனர்; அதுவும், அரசாங்கத்தின் பாதுகாப்பு இருந்ததினால்தான் 50 பேர்களாவது எஞ்சியிருக்கிறார்கள்; 'ஒரு பழம் பெரும் வகுப்பு மக்கள் நம்முடன் இருந்துவிட்டுப் போகட்டுமே,' என்ற நல்லெண்ணத்தால் தான், அரசாங்கம், அந்த 50 பேர்களுக்கு ஆதரவும், பாதுகாப்பும் தருகிறார்கள்.

"அதைப் போலத்தான், 'மன்னர்கள் எப்படி இருப்பார்கள்,' என்பதை உலகம் தெரிந்துகொள்வதற்காக, உலகத்தில் இங்கிலாந்திலும், வேறு சில முஸ்லீம் நாடுகளிலும், நீலகிரி 'தோதவர்'களைப் போல் பாதுகாக்கப் படுகிறார்கள்!

அதைத் தவிர, உலகெங்கும் இன்று மக்களாட்சி முறை, ஜனநாயக முறை ஆகியவை, பல ஆட்சி

(4-ம் பக்கம் பார்க்க)

தஞ்சை மாவட்டத்தில் அண்ணாதுரை சுற்றுப்பயணம்

★

உள்ளிக்கோட்டை :

1—6—55 இரவு 7 மணிக்கு மன்னார்குடிக்கு அடுத்துள்ள உள்ளிக்கோட்டையில், ஊராண்மைக் கழகத் தலைவர் தோழர் அருணாசலம் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் கலந்து கொண்டார்.

அண்ணா அவர்கள் ஊர் எல்லைக்குள் வந்ததும் உள்ளிக்கோட்டை தி. மு. கழகத்தவர்களாலும், உள்ளூர் பொது மக்களாலும், வெளியூர் தோழர்களாலும் வரவேற்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

ஊர்வலம் பொதுக் கூட்ட மைதானத்தை அடைந்ததும், தோழர் அருணாசலம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். எஸ் இளங்கோ, இராம. அரங்கண்ணல், கே. ஏ மதியழகன், அ. பொன்னம்பலனார் ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், சமுதாய—அரசியல்—பொருளாதார விடுதலை குறித்தும் விரிவுரையாற்றிய பின்னர், அண்ணா அவர்கள் திராவிட நாட்டை திராவிடர் அடைந்தால் தான் திராவிட மக்களின் வாழ்க்கை நிலை உயருமென்றும், திராவிடத்தின் செல்வங்கள் வடநாட்டவரால் சுரண்டப்படுவதைத் தடுக்க முடியுமென்றும், ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் வடநாடு வாழ்வுறுவதை விளக்கியும், தென்னாடு தேய்வுறுவதை விளக்கியும், திருச்சியில் விரைவில் நடைபெற இருக்கும் தி. மு. கழக மாநில மாநாடு நமது எதிர்கால வேலைத் திட்டங்களையும், போராட்ட முறைகள் பற்றியும் முடிவு செய்யுமென்றும், மாநாட்டிற்கு யாவரும் திரண்டு வருவதுடன், பொருள் உதவி செய்தும், உழைப்புகள் நல்கியும் மாநாடு சிறப்புற நடைபெறுமாறு செய்யக் கோரியும், கழகக் கொள்கைகள் நாடு முழுமையும் பரவ—நமது குரலை உலகறியச் செய்யும்படி பணியாற்றுமாறு கேட்டுக்கொண்டும் விரிவுரையாற்றினார்.

அண்ணா அவர்கட்கு உள்ளிக்கோட்டை ஊராண்மைக் கழகம், தி. மு. கழகம், மன்னார்குடி தி. மு. கழகம், கூப்பாச்சிக் கோட்டை, ஆலங்கோட்டை தி. மு. கழகம், உள்ளிக்கோட்டை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் ஆகியவை சார்பில் வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டதுடன் மலர்மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

கூட்டத்திற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

மன்னார்குடி தோழர் ப. நாராயணசாமி அவர்கள் மாநில மாநாட்டுக்காக வசூலிக்கப்பட்ட நிதிப் பங்குத் தொகை ரூ. 135—1—3-யும், அண்ணா அவர்களிடம் ஒப்படைத்தார்.

கீவளூர் :

2—6—55 இரவு 7 மணிக்கு, நாகையை அடுத்துள்ள கீவளூர் தி. மு. கழகச் சார்பில், தோழர் ஏ. எஸ். பாண்டியன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் அ. பொன்னம்பலனார், க. அறிவழகன், இராம. அரங்கண்ணல், கே. ஏ. மதியழகன், அண்ணாதுரை ஆகியோர் திராவிட நாட்டு வளம் இன்று வடநாட்டவரால் சுரண்டப்பட்டும், வடநாட்டார் ஆதிக்க ஆட்சிபீடம், தென்னாட்டில் என்றும் நிலைக்கும்படித் திட்டம் தீட்டி செயலாற்றிவருவதையும், கட்டாய இந்தியை வலுவில் திணிக்கும் போக்கு பற்றியும் நாட்டின் எல்லா அதிகாரங்களையும் டில்லி சர்க்காரே வைத்துக்கொண்டு, வரி வசூல் செய்யும் ஏஜெண்டுகளைப்போல் அதிகாரமற்ற நிலையில் சென்னை சர்க்கார் வைக்கப்பட்டிருக்கும் நிலையை விளக்கியும் பேசினார்.

ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால் காங்கிரஸ் ஆட்சிபீடம் வடநாட்டை வளமாக்கி வருவதையும், அந்த ஆட்சியில் மக்கள் கண்ட பலன் வறுமை, பஞ்சம், பட்டினி என்பதுதான் என்றும், எனவே, சமூக—அரசியல்— பொருளாதார —அடிமை நிலையைப் போக்க, சுதந்திர திராவிடக் குடியரசை அமைப்பதே தி மு கழகத்தின் இறுதி இலட்சியம் என்றும் விளக்கி விரிவுரையாற்றினர்.

அண்ணா அவர்கட்குப் பல கிளைக் கழகங்கள் சார்பில் மலர் மாலைகள் சூட்டப்பட்டது; கைத்தறி ஆடைகளும் வழங்கப்பட்டது.

திருவாரூர் :

3—6—55 திருவாரூர் தி மு. கழகச் சார்பில், தோழர ஏ. சந்தானம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் என். எஸ். இளங்கோ, அ. பொன்னம்பலனார், கே. ஏ. மதியழகன், அண்ணாதுரை ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கியும், எதிர்ப்புக்கும், தூற்றலுக்கும், பழிப்புக்கும் கழகத் தோழர்கள் அஞ்சவேண்டியதில்லை என்றும், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற நம்முடைய இதய கீதம்—நம் இறுதி இலட்சியம் வெற்றி பெற்றே தீரும் என்றும் சொற்பொழிவாற்றினர்.

அண்ணா அவர்கட்குக் கிளைக் கழகச் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி துண்டுகளும் வழங்கப்பட்டது.

பின்னர், அண்ணா அவர்கள் திருவாரூர் தி. மு. கழகத்திற்குச் சென்று, கழகத் தோழர்களுடன் கலந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு, தம் குழுவினருடன் அங்கிருந்து பயணமானார்.

விழுப்புரம் :

எம். ஜி. ஆர். நாடக மன்ற 'ஆசை நினைவு' — நாடகம்

4—6—55 இரவு 10 மணிக்கு, விழுப்புரம் சோதி தியேட்டரில் சென்னை: எம். ஜி. ஆர். மன்ற நாடகக் குழுவினரின் 'ஆசை நினைவு' நாடகம் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நாடக இறுதியில், அண்ணா அவர்கள், "தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் நாடகக் குழுவினர், காலத்திற்கும், கருத்துக்கும் ஏற்ற வகையில் சமூக சீர்திருத்த நாடகங்களை நாட்டில் நடித்துக் காட்டி வருவதின் மூலம், பகுத்தறிவு வளர்ச்சிக்கும், கலை வளர்ச்சிக்கும், சமுதாய மறு மலர்ச்சிக்கும் நல்ல பணியாற்றி வருகின்றார்கள்;" என்று எடுத்துக் கூறி, நாடகத்தில் நடித்த நடிகர்களின் திறமையைப் பாராட்டிப் பேசினார். தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் நன்றி கூறினார்.

* * *

மாநில மாநாட்டு நிதிக்கு அன்பளிப்பு

2—6—55 இரவு 7 மணிக்கு, கீவளூரில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் எஸ். எம். கத்தர் அவர்கள், மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 5-ம், குறுக்கத்தி தி. மு. கழகச் சார்பில் மாலைக்காக ரூ. 1-ம், (இத்தொகையும் மாநில மாநாட்டு நிதியுடன் சேர்க்கப்பட்டது) அன்பளிப்பாகத் தந்தார்.

மாஸ்கோவில் பண்டித நேரு

விமான நிலையத்தில் வரவேற்பு

மாஸ்கோ, ஜூலை 7—

இந்தியப் பிரதமர் பண்டித நேரு, தனி சோவியத் விமானமொன்றில், பிரேகிலிருந்து மாஸ்கோ வந்து சேர்ந்தார்.

ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்த விமான நிலையத்தில், 28 ஆண்டுகளுக்குப் பிறகு, சோவியத்தின் சோபிதத்தைக் காண வந்திருக்கும் இந்தியப் பிரதமரை ரஷியப் பிரதமர் மார்ஷல் புல்கானின், சோவியத் கம்யூனிஸ்டு கட்சி செயலாளர் நிகிதா குருஷ்சேவ், வெளி விவகார இலாகா மந்திரி மாலடோவ் ஆகியோர் வரவேற்றனர்.

விமான நிலையத்திலிருந்து திறந்த கார் ஒன்றில், மார்ஷல் புல்கானின் அருகில் அமர்ந்திருக்க, பண்டித நேரு, மாஸ்கோ வீதிகளில் வழியாக பவனி வந்தார்.

வழிநெடுக அணிவகுத்து நின்ற மக்கள், மலர் தூவி, வாழ்த்துக் கூறி வரவேற்றிருக்கின்றனர்.

விமான நிலைய வரவேற்பில், ஷிகஞேவிட்ச், மாலெங்காவ், பிர்சோயன், மார்ஷல் ஜூகாவ் முதலியோரும், இன்னும் 40 சர்க்கார் மந்திரிகளும், மற்றும் சோவியத் அதிகார வர்க்கத்தினரும். கலா நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர் எனத் தெரிகிறது.

விமான நிலையத்தில் பேசிய பண்டித நேரு குறிப்பிட்டதாவது:—

புகழ்மிக்க, அற்புத மாஸ்கோ நகரைக் காண்பதற்காக, சோவியத் யூனியனுக்கு வரவேண்டுமென நெடுநாட்களாக ஆசைகொண்டிருந்தேன்; இன்று அந்த ஆசை நிறைவேறியுள்ளது. நான் மிகவும் மகிழ்ச்சியுற்றிருக்கிறேன்.

"உங்கள் மக்களிடமும், சர்க்காரிடமும் மிக நல்லுணர்வு கொண்டு இங்கு வந்துள்ளேன்: உங்களை நன்ருகப் புரிந்துகொள்ளவே இங்கு வந்திருக்கிறேன்.

"இரு நாட்டு மக்களிடையே உள்ள நட்புறவை பலப்படுத்துவதில் நான் இங்கு வந்தது பெரிதும் பயன் படுமென்பது உறுதியாகும்."

வரலாறு தரும் பரவசத்தில்......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முறைகளில் இடம் பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

"உலக மக்கள் எல்லோருமே சிந்திப்பதும், செயலாற்றுவதுமில்லை. ஒரு சில நாடுகளில்தான்—ஒரு சிலர் தான், அந்தந்த நாட்டு மக்களின் நலன் கருதி சிந்தித்து, ஆட்சி முறை பற்றிய தத்துவங்களை உருவாக்கியிருக்கிறார்கள்; அப்படி அவர்கள் உருவாக்கிப் பலன் கண்ட தத்துவங்களை இதர நாட்டவரும், தங்கள் தங்கள் நாடுகளில் ஏற்றுக்கொள்வது இயற்கையாகி விடுகிறது.

"ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது—எந்த ஒரு ஆட்சி முறையானாலும், அந்த ஆட்சி முறை பற்றிய தத்துவங்களை உருவாக்கியவர்கள், 'உலக மக்கள் எல்லோருக்கும்' என்பதாக எண்ணங்கொண்டு அதனை உருவாக்கியதில்லை—அவரவர்கள், தங்கள் தங்கள் நாட்டு மக்களைத்தான் கண்முன் கொண்டிருந்தனர் — என்பதைத்தான் குறிப்பிடுகிறேன்.

"காந்தியார், 'உலக மக்களுக்கு' என்ற எண்ணத்தில், அகிம்சையை மேற்கொள்ளவில்லை; 'இந்திய மக்கள், தங்களை ஆண்டுகொண்டிருக்கும் வெள்ளையர்களிடம் எப்படி நடந்துகொள்வது,' என்பதற்காகவே—இந்திய மக்களை மனதில் கொண்டுதான், 'அகிம்சை' முறையைக் கைக்கொண்டார். அந்த முறையை வேண்டுமானால், இன்று பலரும் பாராட்டுகிறார்கள்—'அமெரிக்காவில் ஒரு பள்ளிக்கூடச் சிறுமியும், இங்கிலாந்தில் ஒரு மாணவரும்கூடப் பாராட்டுகிறார்கள்,'—என்று கூறிக்கொள்ளலாம்; ஆனால் காந்தியார், இந்திய மக்களுக்காகவே அகிம்சையைக் கைக்கொண்டார்.

"அதுபோலத்தான், எந்த மன்னனின் தலையை வெட்டி அவன் குடும்பத்தையே அழித்தார்களோ, அதே மன்னனின் மகனை—தெருவழியே வாழ்விழந்து சென்றுகொண்டிருந்தவனை அழைத்து வந்து அரியாசனத்தில் ஏற்றி வைத்து, 'பொம்மை இராஜா'வாக அந்த மன்னனை வைத்துக்கொண்டு, மிக அருமையான—துணிச்சலான ஜனநாயக முறையை வெற்றிகரமாக நடத்தி வருகிற இங்கிலாந்து மக்கள், தாங்கள் அனுபவித்துவரும் ஆட்சிமுறை நலன்களை வேறு பல நாட்டு மக்களுக்குத்தர மறுத்திருக்கிறார்கள்.

"இந்தியாவில், அவர்கள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த காலத்தில், தாங்கள் அனுபவித்து வந்த உரிமைகளை இந்திய மக்களுக்கு அவர்கள் தரவில்லையே!

"இந்தியாவில், 'வெள்ளைக்காரர்களுக்கென ஒரு நீதி—இதருக்கென ஒரு நீதி' வைத்திருந்தார்களே!

"இதை, நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்ருல், இங்கிலாந்தின் வரலாற்றையோ, அல்லது பிரெஞ்சுப் புரட்சியையோ, அல்லது வேறு பல நாட்டு வரலாறுகளையோ படிக்கிற நாம், பரவசப்படுகிறோம்—'மக்களுக்காக அல்லவா இந்தப் புரட்சிகள் நடைபெற்றன,'—என்று! பிரெஞ்சுப் புரட்சியைப் படிக்கும் நாம் பரவசப்படுகிறோம்; அந்தப் பரவசத்தில், அப்படிப் புரட்சி செய்து, மக்களாட்சியை நிறுவிய பிரெஞ்சு நாட்டுக்காரர்கள்தான், சில நாட்களுக்கு முன்பு வரையில், புதுவை-காரைக்கால் பகுதியில் ஆதிக்கம் புரிந்துகொண்டிருந்தனர்; அப்பகுதிகளை விட்டுச் செல்ல மறுத்து வந்தனர்; மற்றும் ஆப்பிரிக்காவில் உள்ள சில பிரதேசங்களிலும் தங்களின் ஆதிக்கப் பிடியை வைத்துக்கொண்டிருக்கின்றனர்- என்பதை!

"பிரெஞ்சுப் புரட்சி, மக்களாட்சி எல்லாம் பிரெஞ்சுக்காரர்களுக்கேயன்றி, இதரர்களுக்காக அல்ல என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

"ஆகவேதான், நாம், நமது நாட்டு மக்களைப் பற்றி, நமக்கிருக்கிற ஆட்சி முறை பற்றிக் கவலைப்படுகிறோம்—நமது திராவிடர்களின் எதிர்காலம் பற்றி அச்சப்படுகிறோம்; இதனைத் தோழர்கள் புரிந்துகொள்ள வேண்டும்."

பூந்தமல்லியில் அண்ணு

12-6-55 காலை 10 மணிக்கு, சென்னை-பூந்தமல்லி விக்னேசுவரா நியேட்டரில், மாநில மாநாட்டு நிதிக்காக, பூந்தமல்லி, பூந்தமல்லி கண்டோன்மெண்ட், திருமழிசை ஆகிய கிளைக் கழகங்கள் சார்பில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம், செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் தோழர் கே. டி. எஸ். மணி தலைமையில் நடைபெறும். முன்னுள் பொதுச்செயலாளர் அண்ணு அவர்கள் 'உலகத்தைத் திருத்திய உத்தமர்கள்' எனுந் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். நன்கொடை: ரூ. 1, அணு 8, 4.

சேலம் நகர தி.மு.கழக தோழர்கட்கு

"திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிதிக்காக, 5-6—55 அன்று நடைபெற்ற சேலம் நகர தி. மு. கழக பொது உறுப்பினர்கள் கூட்டத்தின் முடிவின்படி, நிதிக் குழு தோழர்கள் நகரத்தின் எல்லா வட்டங்களுக்கும் நிதி வசூலுக்கு வர இருக்கிருர்கள். அதுசமயம் அந்தந்தப் பகுதியில் உள்ள கிளைக் கழகத் தோழர்கள் நல்லமுறையில் ஒத்துழைத்து நிதி வசூலித்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்,"

என, சேலம் நகர தி மு கழகச் செயலாளர் தோழர் எ. ஆர். கிருஷ்ணன் அறிவிக்கிருர்.

பெங்களூர் மாவட்ட தி.மு.கழகக் கிளைகட்கு

"தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கை எண் 14/55-க்கேற்ப கிளைகளில் தேர்தல் நடத்த வேண்டும். ஏற்கனவே தலைமை நிலையத்தின் தேர்தல் அறிக்கைகளில் காணப்படும் விதிகளின்படி நடத்துதல் வேண்டும். மாவட்டச் செயலாளரால் அனுப்பப்பட்டுள்ள பதிவுச் சீட்டுகளில் தேர்தல் முடிவுகளை எழுதி 14-6-55-க்குள் திருப்பி அனுப்பிவிட வேண்டும். தேர்தலை நடத்தித் தர ஆணையாளர் தேவைப்பட்டால், மாவட்டச் செயலாளரின் அறிக்கைக்கேற்ப உடனடியாக விண்ணப்பிக்கவும்,"

என, பெங்களூர் மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் வ டி. பிரான்சிஸ் அறிவிக்கிருர்.

பிரதமர் வேண்டுகோள் நிராகரிப்பு

வேலைநிறுத்த காரணங்களைப் புரிந்து கொள்ளவில்லை?

பிரிட்டன் இரயில்வே தொழிலாளர்கள் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடன் வானொலி மூலம் கேட்டுக்கொண்டதை, 70,000 பிரிட்டிஷ் இரயில்வே தொழிலாளர்களின் தலைவர்கள் நிராகரித்துவிட்டனராம்!

தாங்கள் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தத்தின் காரணங்களை பிரதமர் நன்ருகப் புரிந்துகொள்ளாமல், அவற்றை நாட்டினரிடையே தவறான முறையில் எடுத்துக் கூறுவதாக அந்தத் தொழிலாளர்களின் தலைவர்கள் கருத்தறிவித்திருக்கின்றனராம்.

துறைமுகத் தொழிலாளர்களும் இதே நேரத்தில் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருப்பதால் பிரிட்டனின் நிலை மேலும் படுமோசமாகி இருக்கிறதாம்.

இவை தவிர 5 அட்லாண்டிக் கப்பல்களைச் சேர்ந்த சுமார் 800 மாலுமிகள் அதிக ஊதியம் கோரி நடத்தி வரும் வேலை நிறுத்தத்தை மேலும் நீடிப்பதெனவும் முடிவு செய்துள்ளனராம்.

★

வேலை நிறுத்தம் முடிவுறும்?

தொழிலாளர்களின் சம்பளம், கூலி முதலிய குறைகளுக்கு பரிகாரம் அளிக்கும் 5 அம்சத் திட்டம் ஒன்றை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் இரயில்வே தொழிலாளர்களின் தலைவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் தொழிலாளர் சங்க காங்கிரசால் இத்திட்டம் தயாரிக்கப்பட்டது இந்த சங்கத்தில் 80 லட்சம் தொழிலாளர்கள் உள்ளனர்.

இன்னும் இரண்டு இரயில்வே தொழிலாளர் சங்கங்கள் இத்திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் தலைவர்கள் இத்திட்டத்தை ஏற்றிருப்பதால் தகராறு சீக்கிரமே முடிவுறும் என நம்பப்படுகிறது.

வேலை நிறுத்தத்தை முடிவுறச் செய்ய தாங்கள் எடுத்துக்கொண்டுள்ள இம்முயற்சியைப் பற்றி தொழிலாளர் தலைவர்கள் சர்க்காருக்குத் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

'குற்றத்திற்கும் தண்டனைக்கும் தொடர்பே இல்லை!

டாக்டர் லோகியா ம. சோ. கட்சி நிர்வாகக் குழுவைச் சாடுகிருர்!

அலகாபாத், ஜூன் 7—

"உத்திரப் பிரதேச ம. சோ. கட்சி நிர்வாகக் குழுவைக் கலைப்பதென்று கட்சியின் தேசிய நிர்வாகக் குழு செய்துள்ள தீர்மானம், அதிகார வெறியின் கொடூரமான அடையாளமாகும்,"

என்று, டாக்டர் லோகியா இங்கு கூறியிருக்கிருர் எனத் தெரிகிறது.

"விலக்கி வைக்கப்பட்ட ஒரு உறுப்பினரை அழைப்பதென்பது, உ. பி. கட்சி செய்த ஒரு குற்றமாயின், அந்தக் குற்றத்திற்கும், அளிக்கப்பட்டுள்ள தண்டனைக்கும் தொடர்பேயில்லாமலிருக்கிறது," என்றும் அவர் கூறியுள்ளார்.

★

ம. சோ. கட்சியில் பிளவேற்படும்?

உ. பி. மாநில நிர்வாகக் குழு 'சஸ்பெண்ட்!'

புதுடில்லி, ஜூன் 7—

'இந்திய மக்கள் சோஷலிஸ்டுக் கட்சிக்குள் பெருத்த பூசல்களும், சோதனைகளும் கிளம்பியிருக்கின்றன,' என்று பத்திரிகைச் செய்தி ஒன்று அறிவிக்கிறது.

'பிரமாதமாகவோ அல்லது எதிர்பாராதவிதமாகவோ ஏதாவது காரியங்கள் நிகழ்ந்தாலல்லாமல் ம. சோ. கட்சிக்குள் இனிமேல் பிளவுகள் தவிர்க்க முடியாதனவாகிவிடும்,' என்றுகூட கூறப்படுகிறதாம்!

இந்திய மக்கள் சோஷலிஸ்டு கட்சியின் தலைமைப் பீடத்தின் ஆணையை மீறி உத்திர பிரதேச மாநில ம.-சோ நிர்வாகக் குழு, மாநில மாநாடொன்றை ஆரம்பித்து வைப்பதற்கு, தலைமைப் பீடத்தாரால் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டிருந்த மது லிமாயியை அழைத்த குற்றத்திற்காக, அம் மாநில நிர்வாகக் குழுவை 'சஸ்பெண்ட்' செய்வதென இந்திய ம.-சோ. கட்சியின் தலைமைப்பீடம் முடிவு கட்டியிருக்கிறதாம்.

'சஸ்பெண்ட்' செய்யப்பட்ட இந்தக் குழுவிற்குப் பதிலாக, உத்திர பிரதேசத்தில் கட்சியின் வேலைகளைக் கவனிக்க 21 பேரடங்கிய 'அட்ஹாக் கமிட்டி' ஒன்றை நியமித்திருப்பதாக ஆச்சாரியா நரேந்திரதேவ் அறிவித்திருக்கிருராம்.

இது தவிர, கட்சிக்கோட்பாடுகளுக்கு முரணுக நடந்து கொண்டமைக்காக உ. பி. கிளையின் தலைவர் கோபால நாராயண சாக்சேனு என்பவர் மீது ஒரு ஆண்டுக்கு ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதென்றும் நிர்வாகக் குழு தீர்மானித்திருக்கிறதாம்.

பல்லாவரம் கைவல்யம் படிப்பக நிதிக்காக

11—6—55 மாலை 6-30 மணிக்கு, பல்லாவரத்தில், அண்ணு அவர்கள் தலைமையில், கைவல்யம் படிப்பக நாடக மன்றத்தார் நடிக்கும் 'மக்கள் தீர்ப்பு' என்ற நாடகம் நடைபெறும்.

மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 100 தரப்படவிருக்கிறது.

சென்னை 21-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

10—6—55 மாலை 6 மணிக்கு சென்னை 21-வது வட்ட (அயன்புரம்) தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் தோழர் பி. முனுசாமி தலைமையில் நடைபெறும். அதுபோது பல முக்கிய பிரச்சினைகள் பற்றி யோசிக்கப்படும்.

தொட்டியம் தி. மு. கழக உறுப்பினர்கட்கு

10—6—55 அன்று, திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், தொட்டியம் தி. மு. கழகக் கிளையின் உறுப்பினர்கள் கூட்டம், மேற்படியூர் பேங்கர் முத்துக்குமார் கட்டிடத்தில், தோழர் அ பெ. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்.

திருமணம்

10—6—55 காலை 9 மணிக்கு, சென்னை-குளை, கல்யாண மேஸ்திரி தோட்டம் (திரு வி. க. திடல் எதிரில்) தோழர் சு. சிங்காரம்—தோழியர் பாப்பாத்தி அம்மாள் திருமணம் தோழியர் சத்தியவாணி முத்து தலைமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் வாழ்த்துரை வழங்குவார்.

அட்லி விலகுவார்?

லண்டன், ஜூன் 7—

பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து கிளமெண்ட் அட்லி, அடுத்த அக்டோபர் மாதத்தில் விலகிவிடத் தீர்மானித்திருப்பதாக நம்பகமாகத் தெரியவருகிறது.

இங்கிலாந்தின் பிரதமராக அட்லி இருந்த காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து வெள்ளையர் ஆட்சிப் பிடிப்பை அகற்றிக் கொண்டார் என்பது ஞாபகத்திலிருக்கக்கூடும்.

திருத்தம்

7—6—55 'நம் நாடு' இதழ் 3-ம் பக்கம் 5-ம் பத்தி 'அன்பளிப்புகள்' என்ற தலைப்பில், "1—6—55ல் உள்ளிக்கோட்டையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பு தரப்பட்டது" என்று இருப்பதை, "உள்ளிக்கோட்டை கழகப் பொதுக் கூட்டத்தின் போது தோழர் துரைசாமி அவர்களது ஆண் மகவுக்கு அண்ணு அவர்கள் 'பாண்டியன்' என்று பெயரிட்டதின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது" என்று திருத்திப் படித்துக் கொள்ளவும்.

* * *

"மகாதேவப்பட்டினம் தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தந்தனர்" என்றிருப்பதை, "......மகாதேவப்பட்டினம் தி. மு. கழகத் தோழர்கள் ரூ. 2 அன்பளிப்பாகத் தந்தனர்" என்று சேர்த்துக் கொள்ளவும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராணய செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா, நெடுஞ்செழியன், எம், ஏ,